## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(24.08.2024 முதல் 28.08.2024)

அறிக்கைஎண்: 43/2024 தேதி : 27.08.2024

### பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36 - 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 26 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### பெரம்பலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (28.08.2024 முதல் 01.09.2024).

| கடந்த வார வானிலை (23.08.2024 முதல் 26.08.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (28.08.2024 முதல் 01.09.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 23/08 | நாள்-2 24/08 | நாள்-3 25/08 | நாள்-4 26/08 | தேதி | நாள்-1 28/08 | நாள்-2 29/08 | நாள்-3 30/08 | நாள்-4 31/08 | நாள்-5 01/09 |
| 0.0 | 0.0 | 0.2 | 0.0 | மழை (மி.மீ.) | 0 | 7 | 1 | 2 | 0 |
| 36 | 36 | 36 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37 | 38 | 37 | 37 | 37 |
| 26 | 26 | 26 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 27 | 26 | 26 | 26 |
| 6 | 6 | 6 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 7 | 6 | 5 | 5 |
| 78-55 | 81-58 | 67-41 | 64-42 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-40 | 70-40 | 70-40 | 70-40 | 70-40 |
| 12 | 16 | 20 | 17 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 16 | 18 | 16 | 14 |
| தெற்கு | மேற்கு | மேற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு |

### பெரம்பலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 29.08.2024 முதல் 31.08.2024 ஆகிய தினங்களில் லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37 - 38 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 8 - 18 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |

| | | |
|---|---|---|
| | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் | நாற்றாங்கால் | உகந்த வானிலையை பயன்படுத்தி சம்பா நாற்றாங்கால் தயார் செய்து விதைக்கவும். |
| | நடவு வயல் | நிலவும் வானிலையை பயன்படுத்தி மழைக்கு முன்பாக சம்பா நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும் |
| வாழை | | வாழை மரங்கள் காற்றானால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | பசு | மாட்டு கொட்டகையில் மழை காலங்களில் கொசுக்கள் அதிகமாக இருப்பின் நொச்சி இலை புகைமூட்டம் போடவேண்டும். ஏனெனில் இது பால் சுகாதாரத்தை பாதிக்ககூடும். |

## குறுஞ்செய்தி

நிலவும் வானிலையை பயன்படுத்தி மழைக்கு முன்பாக சம்பா நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும்

**இயக்குநர்**